உ

கடவுள் துணை.

மானிடக்குறியென்று

வழங்கும்

அங்கக்குறிசாஸ்திரம்.

இஃது

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

46

ராசிச்சக்கரம்.

மீனம். 12	மேஷம். 1	ரிஷபம். 2	மிதுனம். 3
கும்பம். 11			கடகம். 4
மகரம். 10			சிங்கம். 5
தனுசு. 9	விரிச்சிகம். 8	துலாம். 7	கன்னி. 6

தரையில் வட்டமாகமெழுகி இந்த சக்கரம்போல் விபூதியினால் போட்டு மஞ்சளால் பிள்ளையார்பிடித்துவைத்து நாலுவர்ணபுஷ்பஞ்சூட்டி ஒரு மஞ்சள்நிறபுஷ்பத்தை சிறுவர்களிடம் கொடுத்து தொடச்சொல்லி அந்த லக்கப்பிரகாரம் சுபாசுபம்தெரிந்துக்கொள்ளவும்.

1 மேஷமாகிய ஆடுதோற்றினால் நினைத்தகாரியம் முடியாது.
2 ரிஷபந்தோன்றினால் அறைபலன் கிடைக்கும்.
3 மிதுனந்தோன்றினால் அறைபலன்கிடைக்கும்.
4 கடகமானால் உன்மனம்போல் நிறைவேறும்.
5 சிங்கமானால் சத்துருக்கள் மேலிட்டிருக்கிறார் முடியாது.
6 கன்னியானால் உடனே ஜெயமாகும்
7 துலாமானால் நாள்பட்டுதான் நிறைவேறும்.
8 விருச்சிகமானால் அந்தவிஷயத்தில் கொஞ்சவிஷமிருக்கிறது.
9 தனுசு நீநினைத்த காரியம் நம்பவேண்டாம்
10 மகரம் கொஞ்சநாள் பட்டு கைகூடும்.
11 கும்பம் அஞ்சவேண்டியதில்லை வெகுசீக்கிரத்தில்முடியும்.
12 மீனம் இந்தகாரியம் விடுதேடிவரும்.

இந்தச்சக்கரம் தொடச்சொல்லி பார்ப்பவர்களுக்கு தன்னுடைய
லக்கினமே தனக்கு தோற்றினால் எந்தலக்கினமானாலும்
புதயல் கிடைத்த மாதிரி முடியும்.

நூதன புத்தக விளம்பரம்.

சுதேச கைத்தொழில் சாஸ்திரம், விலை ரூபா	1	0	0
சுகந்த பரிமள சாஸ்திரம்	0	8	0
சிவசொரூபசாஸ்திரம்	0	8	0
சரீரசாஸ்திரம்	0	8	0
விவாக சாஸ்திரம்	0	8	0
சகுனசாஸ்திரம்	0	4	0
ருதுஜெனனசாஸ்திரம்	0	4	0
நஷ்டஜாதகம்	0	8	0
நவகண்ட ஆரூடம்	0	8	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
உலகவிசித்திரக்கதை	1	0	0
இங்கிலீஷ் தமிழ் வைத்திய சிகாமணி	3	0	0
பிரபஞ்ச உற்பத்தி	2	0	0
சண்டாளர் சகவாசம்	0	8	0
வேதாந்த ஜட்ஜ்மெண்ட்	1	0	0
குடும்ப சனியனென்னும் அகடவிகட சம்சாரி	0	4	0
ருஷியா ஜப்பான் யுத்தம்	0	4	0
வியாசர்விபரீதம்	0	4	0
கண்கட்டுவித்தை 1000	0	10	0
காரதர்கலகம்	0	6	0
ஷை 2-ம் பாகம்	0	4	0
தெய்வகுணவெளிச்சம்	0	8	0
இந்தியா சமையல் சாஸ்திரம்	0	8	0
நூதன கலியாணப்பாட்டு	0	4	0
போலீசு ஆக்ட்டு	0	4	0
தேவஸ்தான ஆக்ட்டு	0	4	0
ஸ்டாம்பு ஆக்ட்டு	0	8	0
8-வது ஆக்ட்டு	0	8	0
சாட்சி ஆக்ட்டு	0	12	0
தஸ்தாவேஜு ஆக்ட்டு	1	4	0
இந்தியன்பினல்கோட்டு	3	0	0
கிராம முனிசிப் கோட்டு	3	0	0
இந்துலா	2	0	0

இப்படிக்கு.

சி. முனிசாமி முதலியார் கம்பெனி,

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

மானிடக்குறியென்றும்

இரேகக்குறியென்றும் புருஷலட்சணமென்றும்

வழங்குகின்ற

அங்கக்குறிசாத்திரம்.

விநாயகர்-கலிவிருத்தம்.

நூன் முகம்.

நீரும்வெண்மணி நேரும்பரத்தினோர்
கூரிலோங்கும் குமரியருள்சுதன்
வாரணந்திகழ் வதனவள்ளலார்
காரணப்பதம் கைதொழுதேத்துவாம்.

காரணமாம் கைலாயக் கர்த்தாபோற்றி
 ககனமொடு புவனமதை யீன்றாள்போற்றி
பூரணமாம் ஜெகச்சோதி பொருளேபோற்றி
 புத்தியிலே நிர்த்தமிடும் சத்திபோற்றி
வாரணமா முகமுடைய வையாபோற்றி
 வஞ்சியொடு மஞ்ஞையிலே வருவாய்போற்றி
தாரணியில் மானிடத்தின் குறியைச்சொல்ல
 தந்தையொரு பதினெண்பேர் தாளேபோற்றி.

போற்றியே மனிதரிட புதுமையெல்லாம்
 புத்தியினு லானமட்டும் சேகரித்து
சாற்றுகிறேன் அறிவுடைய மாணுகேளு
 சஞ்சலத்தில் வீழாதே மனதாய்நில்லு

காற்றிலே யகப்பட்ட துரும்பைப்போலே
  கணகலங்கி மனங்கலங்கி தடுமாறுதே
நேற்றிருந்தா ரின்றைக்கு வெண்ணீரானார்
  நீயேது மலைபோலே வேர்கொள்வாயோ. ௨

வேர்கொண்டு யிருப்பவர்கள் யாருமில்லை
  விண்ணுடனே மண்கூட வெளியாய்ப்போகும்
பார்கொண்டு ஆண்டமன்னர் கோடாகோடி
  பட்டணத்து வேந்தரிலே யார்தானின்றார்
நீர்கொண்டுபடிபளக்கும் சிவனும்சத்தி
  நேர்கொண்ட பெரியோரே நிலைநிற்பார்கள்
கார்கொண்ட சிறுமணலூர் குடியாய்கொண்ட
  காளமுனி சாமிசொல்லைக் கைக்கொள்வாயே. ௩

முனிசாமி யென்றக்கால் பெரியோனல்ல
  முறைகள்பல சித்துவகைக் கற்றோனல்ல
தனியான சாஸ்திரங்கள் தெரிந்தோனல்ல
  தன்னைத்தா னறிந்தமகா சித்தனல்ல
கனிபோலே நாதாக்கள் வைத்தநூலில்
  கண்டபல துண்டெடுத்துக் கோர்வையாக்கி
பணிபோலே அவரவர்கள் தெரிந்துக்கொள்ள
  பக்குவமா யெழுதிவைத்த பாகம்பாரே. ௪

பாரப்பா மனிதருடல் யெண்சாணாகும்
  பண்ணுமயன் தன்னெழுத்தே ரேகையாகும்
நீரப்பா அள்ளியிடும் நெற்றிமேலே
  நின்றிருக்கும் மண்டையெழுத் தென்றேசொல்வார்
மாரப்பா மண்டையிலே யெழுத்துப்போட்டு
  மயிராலே மறைத்ததாய்ப் புலம்புவார்கள்
ஆரப்பா அவ்வெழுத்தைக் கண்டபேர்கள்
  அரகரா யிப்படியுங் கெடுவாருண்டோ. ௫

உண்டான அங்கத்தின் குறிகளெல்லாம்
  ஒவ்வொன்றாய் சொல்லுகிறேன் வுண்மைகேளு
பண்டான ரிஷிகளப்பா பதினெண்பேர்கள்
  பரத்தொளியைக் கண்டவர்கள் பன்னவாக்கு
திண்டாடி யொருவரையுங் கேழ்க்கவேண்டாம்
  தெரியாத மானிடர்க்கே திரட்டிவைத்தோம்

கண்டாதி சூட்சமதை யறிந்தபேர்க்கு
கலியுகத்திலின்னமொரு குருவுமுண்டோ.
குருவேண்டா வித்தையிது கூறக்கேளு
குடுமியடா மனிதனுக்கு ஆறுசாணும்
அருமையடா கோடியிலே ஒருவனுக்கு
அரசனிட குறிகளிது யறையக்கேளு
திரமான கூந்தல்பனைப் போல்வளர்ந்து
தேடரிய மேகம்போல் கருத்துநின்றாள்
சரியாக நூற்றிருப தாண்டேயாகும்
ஜாண்குறைந்தால் நூறென்று சாற்றலாமே.

(இ-ள்.) மானிடராகப் பிறந்தவர்களுக்கு குடுமியானது ஆறுஜாண் நிகளமிருக்க வேண்டுமாம் ஆனால் அது அரசர்களி லும் நூற்றிலொருவனுக்கு உண்டு அப்படியிருக்குமானால் நூற் றியிருபது வயதென்றுசொல்லலாம் ஒருஜாண் குறைந்திருக்கு மாகில் நூறுவயதென்று சப்தரிஷிமுதலான பதினெட்டு சித்த ரும் சொல்லினர்—எ-று. எ

ஆமடா முனைவெடித்துக் கோறையாகி
அப்போதைக் கப்போதே சிக்குமாகில்
நாமடா யென்சொல்வோம் சுகமேயில்லை
நாடோடி மாடதுபோல் நடக்கையுள்ளான்
காமடா சுருள்பட்டு மொத்தமாயும்
கார்நிரத்தான் காமிவெருகாமியாகும்
போமடா மிருதுவாகத் துவளுமாகில்
புத்தியிலே மிக்கவனுய் புகலலாமே.

(இ-ள்.) குடுமியானது சற்றேரக்குறைய நிகளமாயிருந்த போதிலும் முனைவெடித்தும் செம்பட்டைநிரம்பட்டும் சுருணை சுருணையாய் முருக்கு பட்டிருக்குமாகில் ஒரு ஜீவனத்திலும் நிலைப்படமாட்டான் அதிகக் கருப்புநிரமாயும்சுருட்டைவடிவ மாயும் இருக்குமாகில் முறையில்லாத புணர்ச்சிசெய்வான் அதா வது அதிககாமியாயிருப்பான்—எ-று.

புத்தியுண்டாம் காதகண்டு நீண்டிருந்தால்
பொருளுள்ள புருடனடா சுகவானுவான்
நெற்றியது நாலுவிரற் கடையேயானால்
நெடுந்தூரம் யாத்திரைசெல்ல போகியாவான்

சற்றேரக் குறைவாக யிருக்குமாகில்
 சமுசாரந் தனிலிருந்தே ஞானியாவான்
மற்றவன்றன் னெற்றியிலே வரைநால்கிற்று
 வழுகுபெரு முன்கழுத்தில் வரைமூன்றுகில்.

(இ-ள்.) யாதொரு மனிதனுக்கும் செவிகளானது அகன்டு நீண்டும் இருக்குமாகில் தளராத்திரவியம் பெற்றவனு யிருப்பான் நெத்தியானது தன்கையாலும் விரற்கடை அகலமிருக்குமாகில் ஜீவநதிகள் முதலான கங்காதீர்த்தமாடுவான் தூரஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வான் வேதாந்த கேழ்விகளிலும் சிறந்த யோகியாவான் அப்படிநாலுவிரற்கடையல்லாது சற்றேயேறக்குறையா யிருக்குமாகில் இல்லறமாகிய சம்சாரத்திலிருந்தே ஞானத்திலும் வகாரம் முதலான யோக்குகளில் பிரியமுள்ளவனுயிருப்பான்—எ-று.

ஆகவே யிவ்விரண்டு குறியோனுக்கு
 அப்பனே சொன்னவிந்த ரேகையென்பார்
ஆகவே நாற்பத்தி யைந்துக்குள்ளே
 அவனலவோ தாரமது ரெண்டுகொள்வான்
நோகவேசோறூட்டி வளர்த்ததந்தை
 நோய்கொள்வான் நாற்பதிலே அடையாளங்கள்
சாகவே மாட்டான்நீ பயப்படாதே
 சார்பாக யின்னமொரு குறியுங்கேளு.

(இ-ள்) மேல்பாட்டில் கூறியபடி நெற்றியிலே நாலுவரையாய் கிற்றும் முன்கழுத்தில் மூன்றுகிற்று விழுந்து மடிப்பாகத் தோற்றுமாகில் அதை சொர்ன்னவிந்துரேகையென்றுசொல்லுவார்கள் அந்த அடையாளமுள்ளவன் நாற்பத்தியைந்து வயதுக்குள் இரண்டுதாரங்கட்டுவான் அவ்விதக்குறி பெற்றவனுக்கு நாற்பதாவது வயதிலே அவனுடைய தகப்பன் பிரம்மாதி வயதுக்குள்ளாவான் ஆகிலும் சாகமாட்டான் இன்னம் ஒருவிதக்குறிசொல்லுகிறேன்—எ-று.

கேளடா நெற்றியிலே வரைமூன்றுகில்
 கெடியான வுட்கழுத்தில் வரைரெண்டாகில்
தோளடா முதுகுவலப் புரத்திலப்பா
 தொந்தமுள்ள மருவொன்று தோற்றுமாகில்
ஆளடா வொருதாரம் வீணைப்போகும்
 அப்பனே மறுதாரம் நிலைக்கும்பாரு

மீளடாமூன்றிருப தருபதுக்குள்
  மேநினியி லிக்குறியோன்மீளானெண்ணே.

(இ-ள்.) அவ்விதங்குறிதவறி நெற்றியிலே மூன்றுவரையும் உட்கழுத்தில் இரண்டுவரையும் இருக்குமாகில் இரண்டுதாரத்துடன் நெடுநாளைக்கிருப்பான் தோளாகிய வலதுபுஜத்துக்கடிமுதுகில் கடுகுபோல ஒருமருவு யிருக்குமாகில் அவனுக்கு ஒருதாரம் இறந்துபோகும் அப்படி இறந்துபோன யிந்த அடையாளமுள்ளவன் அறுபதுவயதில் தானு மரணமடைவான்—எ-று. கக

என்னவேநெற்றியிலே கீற்றிரண்டு
  யிடதுபக்கம் நெற்றியிலே மங்குதோற்றில்
கண்ணெனவே மக்களொடு மனைவியானோர்
  கலந்திருப்பார் மாபெரிய குடும்பமாகி
மண்ணென்ற பூமியிலே பொருளுந்தோற்றும்
  மண்டலத்து வேந்தனும் பிரியனுவான்
பண்ணென்ற விக்குறிகள் பொய்யாதப்பா
  பாண்டவர்கள் முன்பாட்டன் வியாசன்வாக்கே.

(இ-ள்.) நெற்றியிலே இரண்டுவரையும் இடதுபக்கம் நெற்றியிலே மங்குபோல ஒரு அடையாளமிருக்குமாகில் பெண்சாதி பிள்ளை பந்துக்கள் முதலானவருடன் பெரியகுடும்பமாகயிருப்பான் பூமியில் சில புதையலுமெடுப்பான் அதிகாரமான வுத்தியோகஞ் செய்வான் இது பாண்டவர்கள் பாட்டனாகிய வியாசபகவான் சொன்னபடி பொய்யாது—எ-று. கஉ

முன்னென்ற நெற்றியிலே வரையைந்தாகில்
  மக்களது தக்காது பொருளுஞ்சேதம்
பின்னென்ற புரங்கழுத்தில் மடிப்புதோன்றில்
  பெரியதன வானுவான் பொய்யேசொல்வான்
கன்னமதி சிரிக்கையிலே மடியுமாகில்
  காமியடா பெண்ணாலே மடிவான்மட்டை
யென்னுணை யிந்தமொழி வெளியிடாதே
  யிணங்காத மடையருக்கு குறிசொல்லாதே.

(இ-ள்.) நெற்றியினிடமாக ஐந்துவரை யிருக்குமாகில் அவனுக்குப்பிறந்த சந்ததிகள் யாதொன்றும் தக்காதாம் புரங்கழுத்தில் மூன்றுமடிப்பு தோற்றுமாகில் பெருத்த பணக்காரனுவான் ஆனல் பொய்சத்தியமுதலான அபாண்டங்களுக்கு அஞ்சமாட்

டான் சிரிக்கும்பொழுது கன்னமானது சத்திவெட்டுபோல்மடியு மாகில் அதிக காமியாயிருப்பான் காமத்தாலேமடிவான் இந்தக் குறியை வெளிவிடாதே—எ-று. கரு

மங்கொன்று மால்போலே வலதுபக்கம்
மருவாகி லுங்கழுத்தி லிருக்குமாகில்
தொங்கவே மிளகுபோ லிருந்திட்டாலும்
தோற்றுகிற யோகமதைச் சொல்லக்கேளு
கெங்கையிலே முப்பத்தி யாறுண்டுக்குள்
கெண்டமது வந்துடனே மீள்வானப்பா
இங்கிதனைப் பொய்யென்று சொன்னமட்டி
யோரதபடுகுழிக்கி யாளாவானே.

(இ-ள்,) வலதுபக்கம் கழுத்தில் யேதானுமொரு அடையா ளம்போல மங்காகிலும் மருவாகிலும்இருக்குமாகில் மிளகுபோல் வுருண்டைவடிவமாக வளர்ந்துதொங்கினலும்அவனுக்கு முப்பத் தியாராவது வயதில் கெங்கையிலே ஒருகெண்டம் வந்துமீளுவான் இதை பொய்யென்றுசொன்னவன் நரகத்துக்காளாவான்-எ-று.

ஆளடா மனிதனிட நெற்றிமேலே
அப்பனே மூன்றுவரை தெளிவாய்ப்பட்டு
தோளான மார்புநேர் கழுத்தின்மேலே
தொங்தமுள்ள பெரியவரை தோற்றுமாகில்
மீளுவான் ஐந்தான வயதுக்குள்ளே
மேலிட்ட கங்கையிலே கண்டம்பட்டு
வேளாவான் பின்னையொரு தோஷமில்லை
வெகுபணத்துக் குள்ளவனாய் மீளுவானே.

(இ-ள்.) ஒருமனிதனுடையநெற்றியின்மேல்மூன்றுவரையும் உட்கழுத்தில் ஒரேமடிப்பாக பெரியவரைதோற்றுமாகில் அவனு க்கு ஐந்தாவது வயதில் கெங்கையிலே ஒரு கெண்டம்வந்து மீளு வான் பிறகு ஒருதோஷம் கிடையாது—எ-று. கரு

மீண்டவன்றன் யோகமிது யின்னமுண்டு
மேல்பார்வை கொள்ளாதே கேளுகேளு
ஆண்டனென்ற வயதுமுப்பதாகுமுன்னே
ஐந்துபிள்ளைப் பெருவான்கா ணுண்மூன்றாகும்
தாண்டியே நடைநடைப்பான் தீரக்காரன்
தனலாபம் கொஞ்சமடா தரித்ரனல்ல
வேண்டியதை யனுப்பிவைப்பான் குறைவிராது
விண்ணரிய சத்தியமாய் விளம்புவேனே.

(இ-ள்.) முன்பாட்டி லுரைத்த யோகக்காரனுக்கு முப்பது வயதுக்குள் ஐந்துபிள்ளையுண்டாகும் அதில் பெண்ணிரண்டுஆண் மூன்றாகும் அவனுடைய அடையாளம் என்னவென்றால் தாண்டு காலாய் நடப்பான் அதிகபணக்காரனுமல்ல தரித்திரனுமல்ல வேண்டிய சுகமெல்லாம் அனுபவிப்பான்.—எ-று. கசு.

விளம்பவே அடியிதழ்தான் பெருத்துநீண்டு
விதமாகத் தலைபெருத்து யிடதுபக்கம்
குளம்பவே மங்கொன்று தோற்றிக்கொஞ்சம்
குட்டையாள் கருத்தவனாய் குழிக்கண்ணாகில்
தளம்பவே கடனழுந்தி முப்பதாண்டில்
தன்மனைவி பரிகொடுத்து தனியோனாவான்
குளம்பவே யிக்குறிக ளுள்ளோனுக்கு
குழந்தையது பெண்ணொன்று மென்றுசொல்லே.

(இ-ள்.) அடியிதழ்பெருத்தும் நீண்டும் தலைபெருத்தும் இடதுபக்கம்தோளில் மங்கு ஒன்றுயிருக்குமாகில் குழிக்கண்ணாக யிருந்தாலும் குட்டையாளாகவும் கருத்தவனாகயிருக்கும் இந்தக்குறியெல்லா முள்ளவன் முப்பதுவயதுக்குள் சாத்தியப்படா கடன்காரனாகி யிருப்பான் அவனுக்கு வொரே பெண்குழந்தையிருக்கும் பெண்சாதி யிறந்துவிடுவாள்—எ-று. கஎ

பெண்ணொன்று கூறினபின் யின்னங்கேளு
பிடரியிட பக்கமொரு மறுவுகண்டால்
கண்ணெனவே பூப்பட்ட பிள்ளையொன்று
கதிர்போலே மானிரமாய் வளர்வானப்பா
அண்ணலே யிக்குறிக ளநேகமுண்டு
யாரறியப் போறார்க ளவனிமீது
விண்ணிலே மீனமதை யெண்ணினாலும்
வினையுடலாம் மனிதர்குறி வேணதுண்டே.

(இ-ள்.) பிடரியிலேயிடதுபக்கம் ஒருமருவுவுள்ளவனுக்கு கண்ணில் பூப்பட்ட பிள்ளையொன்றுபிறக்கும் அதுமானிறமாய் இருக்கும் ஆகாயத்திலே யிருக்கிற நக்ஷத்திரத்தை எண்ணினாலு மெண்ணலாம் வினைக்காரணமாய் பிறந்த இந்தமானிடர்கள் குறியைச்சொல்ல ஆறால்முடியும்—எ-று. கஅ

மனிதனவ நெற்றிகறை யைந்தேயாகில்
மாளாமல் நூறாண்டு சரியாயிருப்பான்

இனிதான நான்குவறை தோற்றுமாகில்
  லெண்பதே வயதென்று மைமையோர்சொல்வார்
துணிவாக மூன்றுவறை காணுமாகில்
  தொல்லுலகில் வயதறுப தென்றேசொல்லு
அணியாக கீற்றிரண்டே தோற்றுமானல்
  அவனியிலே நாற்பதென்று வறையலாமே.

(இ-ள்.) யாதொருமனிதனுக்கும் நெற்றியிலே ஐந்துவறையிருக்குமாகில் ௱-வயது சரியாயிருப்பான் நாலுவறையிருக்குமாகில் அ௦-வயதுயிருப்பான் மூன்றுவரை யிருக்குமாகில் சூ௦-வயதுயிருப்பான் இரண்டு கீற்றே தோற்றுமாகில் ச௦-வயது இருப்பானென்று சொல்லலாம்—எ-று. கசு

வறையொன்றுங் காணமல் சந்திரன்போல்
  வளமாக நெற்றியது காந்திவீசி
கயர்போல சிலநரம்பு மேலேதூக்கி
  கண்மணியே சாரைப்போல் நீண்டிருந்தால்
தறையாளும் இராஜனுக்கு மந்த்ரியாவான்
  தலைசிறுத்து கண்குழிந்தால் தரித்ரனுவான்
கறைபோல புருவமது அகண்டிருந்தால்
  கன்னியர்கள் மோகித்துக் கைக்கொள்வாரே.

(இ-ள்.) நெற்றியினிடமாக யாதொரு கீற்றுமடிப்பு மொன்றுமில்லாமல் எட்டாம்பிறைச் சந்திரன்போல் காந்திவீசி வெவ்வர்னமாயிருப்பதன்றி சிலநரம்புகள் தூக்கி சாரைப்பாம்புபோல் ஓடியிருந்தால் அவனுக்கு மந்திரியோகம் கிடைக்கும் அல்லது அதிகாரம்பொருந்திய பெரிய உத்தியோக முள்ளவனுய் செங்கோல் செலுத்துவான் அந்த அடையாளமுள்ளவனுக்கே தலைபெருத்து அழகில்லாமலும் உள்ளடங்கிய குழிக்கண்ணுமா யிருப்பானுகில் மீளாதரித்திரனுவான் அப்படியா யானுலும் புருவமானது வர்ணம் தீட்டியதுபோல கருத்து பட்டையாக அகண்டிருக்குமாஸ்ரீகள் மோகித்து அவனுக்கு இலவசமாக மோகத்தைக்கொடுத்து கைக்கொள்வார்களாம்—எ-று. உ௦

கைக்கொள்வார் இருகண்ணும் அலரிபோலே
  கடைக்கண்ணும் சிவந்திருந்தால் தனவானுவான்
மைப்பட்டு துடைத்தாப்போல் மாசிகண்ணன்
  மாபெரிய வினைசெய்வான் மடையனப்பா

செப்பரிய மலர்மருவாம் புள்ளிக்கண்ணன்
செந்தமிழால் சிலதுகவி செய்வானப்பா
கைப்பட்ட தாமரைப்போல் பூர்த்தகண்ணன்
கணக்கில்லா பொன்படைத்து சீமானுவான்.

(இ-ள்.) யாதொருவனுக்கு அலரிபூப்போலே கண்கள் பிரகாசித்தும் கடைக்கண் சிவந்திருந்தால் தக்க திரவியமுள்ளவனுய் சுகித்திருப்பான் மாசியாகிய மேகத்தைப்போன்ற அழுக்குக்கண்ணன் மூர்க்ககுணமுள்ளவனும் தரித்திரனுமாயிருப்பான் மலரினுள்ள அரும்பைப்போல சிறுமுழிகளுள்ளவன் அல்லது குரிதிறமுள்ள கண்ணன் செந்தமிழாகிலும் சுயபாஷையில் சிலகவித்துவம் செய்வானும் கையினுல் இதழ்களை பிரிக்கப்பட்ட தாமரைபோல மலர்ந்து பிரகாசிக்கும் பெரியகண்களையுடையவன் கணக்கில்லாத திரவியம்படைத்து சீமானுயிருப்பான்—எ-று. உக

ஆகவே தாடையிலே சுழியொன்றுகில்
அப்பனே ராஜனிட யோகமாகும்
ஆகவே தாடையிலே சுழிரெண்டாகும்
அதிகாரத் தொழில்பெருவா னடங்கமாட்டான்
ஆகவே தாடையிலே சுழிமூன்றுகில்
அவனுடைய வயதப்பா ஞன்காம்பத்தில்
ஆகவே யோகதிலே பெருவானென்று
அவனியிலேவியாசமுனிசொன்னதாமே.

(இ-ள்.) மனிதனது தாடையிலே ஒருசுழியிருக்குமாகில்இராஜயோகம்பெற்று சுகமாக வாழ்ந்திருப்பான் இரண்டுசுழியிருக்குமாகில் சூரத்தொழிலாகிய அதிகாரம் செலுத்துவான்மூன்றுசுழியிருக்குமாகில் அவனுக்கு நாற்பதுவயதில் அகஸ்மாத்தாய் ஒரு யோகம் கிடைக்குமென்று வியாசமுனிசொன்னுர்—எ-று. உஉ

சொன்னதொரு வலதுபுஜம் மீதிலேதான்
சுழியொன்று யிருந்தாக்கால் யோகங்கேளு
பன்னதொரு தனவானுய் வாழ்வானப்பா
பாவியடா யிடதுபுஜம் மேலேயானுல்
தன்னதொரு வலதுபக்கம் சிரசுதொட்டு
தறைதாங்கும் பாதமட்டும் அரிவாய்பாரு
மன்னதொரு வரும்புரியாய் சுழிகண்டாக்கால்
மண்ணுலகி லுள்ளளவும் சுகமாய்வாழ்வான்.

(இ-ள்.) ஆடவனது வலதுபுஜத்தின்மேல் சுழியிருக்குமாகில் கொஞ்சம் தனவானாகவேயிருப்பான் இடதுபக்கம் புஜத்தில் சுழியிருந்தால் யெந்தஜீவனத்திலும் பாவியாகவேயிருப்பான் யாதொருவனுக்கும் சிரசிலிருந்து வலதுபக்கமேவலம்புரிசுழிகள்இருக்குமாகில் அதினால் பிரயோசனம் உண்டென்பார்கள் இடம்புரிச்சுழி புருஷர்களுக்கு ஆகாதாம்—எ-று. உங

வாழ்கவே முன்னோர்கள் வைத்தநூலை
  வகையறிய மாட்டாத வையத்தோற்கு
தாழ்வின்றி சிறுமணவூர் முனிசாமித்தான்
  தனித்தனியா யுள்ளதெல்லாம் கோர்வையாக்கி
கேழ்வியொன்று மில்லாமல் தெரிந்துக்கொள்ள
  கெணிதமெல்லாம் வெளிநடையாய் சொன்னேனப்பா
கீழ்சிமையாய் கண்ணடியில் மச்சங்கண்டால்
  கிணற்றிலே புதையலொன்று மெடுப்பானப்பா.

(இ-ள்.) முன்னோர்களால் சொல்லப்பட்ட பலபலநூலையுங்கொண்டு சிறுமணவூர்முனிசாமியால் கோர்வையாக்கிய நூலுக்கு ஆசானில்லாமலே தெரிந்துகொள்ளலாம் கண்ணிமையிருக்கும் கீழ்இரப்பையின்மீது எந்தபுருடனுக்கு மச்சமிருக்கிறதோஅவன் கிணத்திலே திரவியங்கண்டெடுப்பான்—எ-று. உச

அப்பனே இன்னமொரு குறியுமுண்டு
  அவனுடைய யிடதுநிமை துடிக்குமாகில்
செப்பியதோர் வலதுபக்கம் மச்சமொன்று
  சீரப்பா மார்பினிலும் துடையிற்கொள்ளும்
அற்புதமாய் இக்குறிகள் இருக்குமாகில்
  அவனுடைய வீடுவிட்டு வருஷம்போவான்
கற்பதியில் பெண்பிறந்து மாண்டுப்போகும்
  காளான பிறகுமொரு ஆணுண்டாமே.

(இ-ள்.) எந்த ஆடவருக்கும் இடதுபக்கம் புருவம் படபடென்று துடிக்குமாகில் அவனுடைய வலதுபக்கம் முகத்தில்மச்சமும் அல்லது மார்பிலும் துடையுள்ளும் மச்சமிருக்கு மாகில் அவனுடைய வீடுவிட்டு ஒருவருஷம் யாத்திரை செய்துவருவான் ஒரு பெண்குழந்தைபிறந்து யிரந்துபோகும் பிறகுஆண்குழந்தை பிறந்து அதுதான் கடைசிவரையில் யிருக்கும்—எ-று. உரு

பிறவியடா மானிடமாய்ப் பிறந்தபேர்க்கு
  பிலமான குறியொன்று சொல்லக்கேளு
அறைதனிலே தொடைக்குள்ளே குறியின்மேலே
  அவனவன்தன் வலதுபக்கம் மருவுகண்டால்
பிறவிமுதல்மாளளவும் செல்வனவான்
  பொல்லாத வருமையடா யிடதுபக்கம்
கறையான வலதுவிழி மேலேயானால்
  கண்ணியனா யொருகுடிக்கி பெரியோனவான்
பிரியான வலமூலேமேல் மச்சமானால்
  பெருமாள்போல் பலவிதத்தும் பெரியோன்றானே.

(இ-ள்.) ஒவ்வொரு ஆடவருக்கும் அவரவர்கள் கழுத்துக் குள்ளேயாவது அறையிலாவது ஆண்குறி யென்னும் லிங்கத்தின் மேலேயாவது வலதுபக்கம் மருவிருக்குமாகில் வெகுசெல்வனா யிருப்பான் இந்த இடங்களிற்றானே இடதுபக்கம் மருவிருக்கு மாகில் வருமையுடையவனாயிருப்பான் வலது கண்ணின்மேலே யிருக்குமாகில் அரசுக்குஒத்துமையாகிய அதிகாரம் செய்வான் வலது மூலைக்கண்ணின்மேலிருந்தால் மகாவிஷ்ணுவைப்போல் எ ந்தொழிலிலும் சாமார்த்தியமுள்ள புருஷனாயிருப்பான்—எ-று.

குமிழ்நீண்டு கண்சிவந்து புருவமேறில்
  கோபியென்றேயுலகில்குறியுஞ்சொன்னேம்
தமிழருமை யரிவன்மிக பொருளும்சேர்ப்பான்
  சார்ந்தமுள்ள பேர்க்குவெகுசாந்தனவான்
குமிழ்பெருத்து கண்கலது லச்சையானால்
  கோலமடா அவன்பிழப்பைக் கூறக்கேளு
அழிந்துபோம் ஒருதாரம் கிணத்தில்வீழ்ந்து
  அவனியிலே மருதாரங் கட்டுவானே.

(இ-ள்.) ஆண்பிள்ளையாகப்பிறந்து வொவ்வொரு வருக்கும் நாசியானது நீண்டு கண்களானது சிவந்தும் யோர்புருவமாகியும் இருக்குமானால்எப்பொழுதும் கோபக்காரனென்று சொல்லலாம் அன்றியும் தமிழ்முதலானபாஷையில் ஊக்கமுள்ளவனாயிருப்பா ன் தளராத பணம்படைத்தவனாய் நல்லவருக்கு நல்லவனாயும் துஷ் டருக்கு துஷ்டனாயுமிருப்பான் அப்படி யல்லாது நாசியானது கனத்து கண்களானது பச்சையாக யிருக்குமானால் அவனுடைய முதல்தாரம் கிணத்தில்வீழ்ந்து யிறந்துபோகும் பிறகு யிரண்டாந் தாரம் கட்டுவான்—எ-று.

பல்வரிசை முற்போது ழைந்தோன்றில்
பசியாமல்ஜீவிப்பான் குறைவிராது
சொல்லியவன் சிரிக்கையிலே மூதேவிப்போல்
சுளித்தமுக மானக்கால் தரித்திரனுவான்
வில்லார்ந்த அரசனைப்போல் சிரிக்கப்பெற்றோன்
வெகுபணத்தைக் கொண்டுவியா பாரம்செய்வான்
அல்லாத அழுகைநகை யுள்ளோனப்பா
அடுத்தயிடங் கூடத்தா னழியும்பாரே.

(இ-ள்.) பல்வரிசையானது முத்தைப்போல் பிரகாசிக்க சிரிக்கிறவன் குறைவில்லாத ஜீவனமும் அடுத்தவரை ஆதரிக்கும் சக்தியுள்ளவனுயுமிருப்பான்ஒருவன் சிரிக்கும்போது மூதேவிபோல் அழகில்லாமல் சுளித்தமுகமாயிருக்குமானல் தரித்திரமே யனுபவிப்பான் அல்லது இராசாக்களைப்போல் இருமாப்பான சிரிப்பு சிரிக்கிறவன் வெகு பணமுள்ளவனுயும் பத்துபேருக்கு தலைவனுக பெரியவியாபாரம் செய்பத்தக்கவனுயிருப்பான் ஒருவன்சிரிக்கும் போது அழுகிற முகத்தைப்போலிருக்குமானல் அவன் அடுத்த யிடங்கூட தரித்திரம்மேலிட்டு தாழ்வுடையும்—எ-று. உ௮

இனிகெருடக்கயர்
சாஸ்திரம்.

கைவிரலா மைந்தினையுங் கயற்றினலே
கலந்தளந்து ஓர்நீள மாகக்கண்டு
செய்யவே முழங்கையைத் தொட்டுமைந்தர்
சீராக நடுவிரலை யொட்டிப்பாரு
ஐவிரலுந் தாண்டியது மிச்சமானல்
அவனுடைய போகமதை அறையக்கேளு
வையமிசை நூறுண்டு குறைவில்லாமல்
வாழ்குவான் சிவிகையுடன் வாழ்வானப்பா.

(இ-ள்.) வலதுகையின் ஐந்துவிரல்களையும் ஒரு கயற்றினல் அளந்துஅந்தகயற்றை முழங்கையிலிருந்து நடுவிரலுக்குபார்க்கையில்அந்த கயாானது ஐந்துவிரலும்தாண்டி மிச்சப்படுமாகில்அவன் சரியாய் நூறுவயது வரைாலும் பல்லக்கு முதலான வாகனங்களோடு மிகவும் பிரக்கியாதியாய் வாழ்ந்திருப்பான் அப்படியல்லது

சமமாயும் அல்லது ஒருவரை குறைவாக யிருந்தபோதிலுஞ் சகல பந்துக்களுடன் கூடியசுகத்தோடு ஜீவியாயிருப்பான்—எ-று.

முன்னளந்த படிகயற்றை யளந்துபார்க்கில்
முழங்கையி லிருந்துமணிக் கட்டுமட்டும்
தன்னைவொட்டி யங்கையிலே நிற்குமாகில்
தரணிமிசை யனைவருக்கும் யேழையாவான்
பன்னவொரு துணையின்றி யொருவனாகி
பலவீடு மிரந்துண்ணும் பசியோனாவான்
பின்னமில்லை யிக்குறிகள் பொய்யாதப்பா
பின்புரணிச் சொல்லாத முனிநூலாமே.

(இ-ள்.) முன்னளந்த மாதிரியாகவே கயற்றையளந்துபார்க்கில் மணிக்கட்டுவரையில் வந்தாலும்உள்ளங்கையில் வந்தாலும் அவனுடைய மனைவிமக்கள் யாவுந்தோற்று ஒருதுணையு மில்லாமல் பிச்சை யெடுத்து ஜீவனஞ்செய்வான்.—எ-று. ௫௰

மாலைபோல் ஒருகயற்றை கழுத்திலிட்டு
மாரிரண்டின் முலைக்காம்புக் களந்துக்கொண்டு
சாலவே அவன்சிரசில் சுற்றிப்பார்க்க
சரியாக நின்றக்கால் தனியோனாவான்
நூலதுவும் மிச்சமா யிருக்குமாகில்
நேரிழையாள் பிரியனடா நெரிங்கிவாழ்வான்
ஞாலமதி லொருநாளும் பிரியமாட்டான்
நம்பியே முனிவாக்கை நாட்டிற்சொல்லே.

(இ-ள்.)ஒரு கயற்றையெடுத்து மாலைபோல் கழுத்தில்போட்டு இரண்டு மார்முனைக்கும்அளந்து அந்தக்கயற்றை நடுநெற்றிக்கு நேராய்காதை நீக்கலாக தலையைச்சுற்றி யளந்து பார்த்தால் சரியாயிருக்குமானால் சம்சாரத்தில் பிரியமில்லாதவன் சிலகாலம் கலந்திருந்தாலும்சிலகாலம் பெண்சாதியை நீங்கிருப்பான் அந்தக் கயறானது தலையைச்சுற்றியும்மிச்சப்படுமானால் ஸ்ரீகளுக்கு மெத்தப்பிரியனாயிருப்பான் இவன்மீது ஸ்ரீயும்பிரியமாயிருப்பாள் ஒரு நாளுந் தனியாயிருக்க மாட்டான் இது பொய்யாகமாட்டாது சகலருக்கும் முனிவாக்கென்று சொல்லுவாய்—எ-று. ௫௧

இன்னமொரு கயறளவு சொல்லக்கேளு
யிதமாக ஐந்துவிரல் வளையம்போலே

சொன்னபடி நூலளந்துக் கொண்டதனைச்
　சுற்றிப்பார் மணிக்கையில் சரியாநின்றால்
மன்னவனே யுன்னுடைய திசையைக்கேளு
　வாழ்மனையில் குறைவில்லை வருத்தமில்லை
அன்னவிதம் நூலளக்க குறையுமாகில்
　அகலாத வருமையென்பார் ஆதிநூலோர்.

(இ-ள்.) ஐந்துவிரலையும் மோதிரம்போல் வளையமாக அளந்து அந்தக்கயற்றை மணிக்கையிற் சுற்றிப்பார்த்தால் அந்தக் கயறுனது குறைந்தால் பொருள் நில்லாது மனிதருக்கும் பகைகாட்டும் அல்லது கயறுனது அதிகப்பட்டு மீதியாகுமாகில் பொருள் சேரும் பிள்ளைகளுமுண்டு தன்சொல்லே மேன்மையாகும்-எ-று.

தோளான கிலெலும்பில் கயற்றைவைத்து
　தோற்றமுடன் நீட்டிநடு விரலின்நீளம்
தாளாதென் றேயொருவர் சொல்லாவண்ணஞ்
　சரியாகக் கயறதனை யளந்துக்கொண்டு
நீளமதை அதற்கிரட்டை யாகச்சேர்த்து
　நின்றவன்றன் காலடியில் முனையைவைத்து
சாலவவன் நெற்றியிலே முகவாஞ்செல்வம்
　சஞ்சலமில் லாதிருப்பான் வாழ்மட்டுந்தான்.

(இ-ள்.) ஆண்பிள்ளையாகிய ஆடவர்களினது வலது தோளும் கில்லெலும்பின்மேல் கயற்றைவைத்து கையைநீட்டி நடுவிரலின் நிகக்கண்ணுக்குச்சரியாய் அளந்துஅதைரெட்டித்து அவர்களை நிற்கவைத்துகாலடியில் ஒருமுனையைவைத்து மற்றவொரு முனையைப் பிடித்து மனிதனை அளக்கும்போது நெற்றிவரைக்கும் வந்தால் தொண்ணூறு வயதளவும் மிகசவிக்கியமாயிருப்பான் கண் புருவத்திற்கு வந்தால் யெண்பது வயதுஞ் சமாசமான தாழ்வாயிருப்பான் மூக்கு அளவுக்குவந்தால் கொஞ்சம் கோபமுள்ளவனும் வாசனை திரவியத்தில் பிரியமுள்ளவனுமிருப்பான் வாயளவுக்குவந்தால் அன்னத்துக்குமாத்திரங் குறைவில்லாதவனும் சொற்பஜீவன முள்ளவனுமிருப்பான் அதற்கும்குறைவாக முக்கட்டை முதலான அளவுக்கு குறைந்தால் தரித்திரனென்று தடையில்லாமல் சொல்லலாம்—எ-று. ௱௲

முன்னளந்தக் கயறதுதான் நெற்றிக்கேரில்
　மொழிந்திட்டோம் வயதுதான் தொண்ணூறென்றே

பன்னவிரு புருவத்தில் வந்துநின்றால்
பரமன்மேல் ஆணையடா என்பதாகும்
பின்னிய மூக்களவு வந்துதானால்
பேசினேன் மெழுபதின்மேல் பிழைக்கமாட்டான்
அன்னமுண்ணும் வாயளவில் வந்துநின்றால்
அப்பனே அவன்வயது ஐம்பதாமே.

(இ-ள்) முன்னளந்த கயறுனது நெற்றிக்கிவந்தால் தொண்ணூறுவயதும் புருவங்களுக்குவந்தால் எண்பதுவயதும் வாயின் மேலுதட்டுக்குவந்தால் அறுபத்தியைந்தும் கீழுதட்டுக்குவந்தால் அறுபதும் அந்தக்கயறுனது கழுத்தளவுக்கே வந்தால்மிக துக்கமும் வயது ஐன்பதாம் நெஞ்சிக்குழிக்கு சரியாய் நின்றால் முப்பதுவயதும் மார்பிலேதானே நின்றுவிட்டால் இருபதுவயதென்று இமையோர்களும் சொல்லுவார்கள்—எ-று. ௩௪

உந்தியது மாரளவுக்குள்ளடங்கி
ஒருமடிப்பு தோற்றுவதே தரித்திரமாகும்
தந்திபோல் வயறதுதான் மிகவேதூக்கி
தாராள மாய்மடிந்தால் தனவானாவான்
விந்தையாய் பாம்புபோல் வயிர்சுருங்கி
வெடுவெடுப்பா யுள்ளவனே வெகுளியாவான்
அந்தமற்று தடுக்குபோல் வயறுள்ளாற்கு
அதிகமடா யீரல்பெருந் தீனிக்காரன்.

(இ-ள்) வயறுனது மார்புனைக்கி சமமாகவும் ஒரேமடிப்பு விழுமாகில் தரித்திரனாவான்யானைவயற்றைப்போல் பெருத்து ஐந்து அல்லது ஆறுமடிப்புவிழுமாகில் மிகுந்தபணக்காரனாவான் பெரிய வயிருயிருந்தபோதிலும் மடிப்பில்லாமல் இடதுபக்கஞ்சுழியிருக்குமாகில் கொடியதரித்திரனாயிருப்பான் பாம்பின்வயற்றைப்போலவும் பெருக்காமலும் சிறுக்காமலுமிருக்குமாகில் வெகுளியாயிருப்பான் அதாவது சிலவுக்காரனாவான் அந்தமில்லாதவன்தடுக்குபோல் இருக்குமாகில் பெருந்திண்டிக்காரனும் மானயீனமில்லாதவனும் ஆவான் அவனுக்கு ஈரல்பெரிதாயிருக்குந் தீரமுள்ளவனா யிருப்பான்—எ-று. ௩௫

வயற்றிலே வலதுபக்கம்மச்சமாகில்
வெண்டமிழில் சிலதுகவி வழுத்துவான்காண்
வயற்றின்முதல் மாரளவும் ரோமமாகி
வளர்புல்லுப் போல்முளைந்தால் மானியாவான்

வயறுமுதல் மார்பளவும் ரோமமுற்று
வனிதயர்போ லிருந்தாக்கால் வஞ்சனுவான்
வயற்றிலே வலம்புரியாய் சுழிகண்டாக்கால்
வாழ்நாளெல் லாம்சுகமாய் வாழ்வான்றுனே.

(இ-ள்) வயற்றினிடமாக வலதுபக்கம் மச்சமிருக்குமாகில் மிக சாமார்த்தியமுள்ளவனும் சுயபாஷையில் கவித்துவம் செய்ப வனுமாயிருப்பான் வயர்முதல் மார்வரையும்புல்முளைத்ததுபோல் செகிட்சியாகரோமங்கள் வளர்ந்திருக்குமாகில்மிகவும் மானியா யிருப்பான் அதாவதுயோக்கியனென்பதாம் மார்முதலானவிடங் களில்ரோமமேயில்லாமல்ஸ்ரீகளைப்போலிருக்குமாகில்வஞ்சகனும் கபடனும் சூதுக்காரனும் போக்கிரியுமாயிருப்பான் வயற்றினிட மாக வலதுபக்கம் வலம்புரிசுழி யிருக்குமாகில்அவனது வாழ்நா ளாகிய ஆயிசுபரியந்தம் சுகமுடையவனும் பணக்காரனும் அதி காரம்பெற்றவனுமா யிருப்பான்—எ-று. ௬௬

சுகமென்ற மனைவியொடு புணரும்போது
சூட்சமது தானறியுங் குறியைக்கேளு
அகமென்ற வீரியந்தான் சீக்கிரத்தில்
ஆரணங்கு தனக்ககன்றால்செல்வமுண்டாம்
பகடுபட்டுச் சிலநேரஞ் செல்லுமாகில்
பனிப்போலே துக்கமது வந்துமாறும்
இகமதிலே பொதுமடந்தை யானபோதும்
யிக்குறிகள் தப்பாது யிணங்கிப்பாரே.

(இ-ள்) யாதொரு ஸ்திரீயைப்புணரும்போது வீரியமானது அம்மாதுக்கு சீக்கிரம கலிதமாகும் பட்சத்தில் ஆடவனுக்குசெல் வம் பெருகுஞ் சற்றுநேரம்படுமாகில் கொஞ்சம் துக்கமுள்ளவனு யிருப்பான்—எ-று. ௬௭

குறியென்ற வீரியந்தான் மல்லிகைப்போல்
குணமாகமணங்கொடுக்கில் தனவானுவான்
வறியென்ற சுண்ணாம்பு நாற்றமாகில்
வையமிசை செல்வமது வளராதப்பா
தறியென்ற தேன்போலே வாசம்வீசில்
தையலர்கள் பிரியன்வெகு சுகவானுவான்
பரியென்ற முனிவாக்கு பலவாறேது
பரிட்சிக்கத் தெரியுமடா பாரின்மீதே

(இ-ள்) வீரியம்வுதிக்கும்போது மல்லிகைப்பூவாசம் வீசினுல் சகல அயிஸ்வரியமுண்டாகி ஆண்பிள்ளைபெருவான் சுண்ணாம்பு

நாற்றம் வீசினால் தரித்திரமாகுந் தேன்வாசனைவீசினால் மிகவுஞ் சவுக்கிய மாயிருப்பானென்று முனிநூலின் வுண்மைபரிட்சித்த வனன்றி மற்றவனுக்கு பலகால்கூறியும் படன்படா—எ-று. ௩அ

பாரென்ற வுலகத்தில் புருடர்க்கெல்லாம்
பகரக்கேள் சிறுநீர்தான் பெய்யும்போது
நீரென்ற வந்நீர்தான் வலமாயோடி
நீண்டமும் புரிகயர்போல் சுழலுமாகில்
காரென்ற மேகம்போல் பணம்பெருத்து
கதித்தசமு சாரியதாய்க் காணவாழ்வான்
தீரென்ற விடப்புறமா யோடுமாகில்
தரித்திரமே குடிகொள்ளும் தனம்நிற்காது
நீரென்ற ஜெலமலமும் ஒன்றாய்வந்தால்
நிலமீது வியாதிநெடு நாள்நீங்காது.

(இ-ள்) ஒவ்வொருபுருஷருஞ் சிறுநீர்விடும்போது அந்நீரானது தன்வலப்புறமாகஓடி வலம்புரியாகவே சுழன்று முருக்காய் விழுந்தால் வெகுநன்மையுஞ் சுகபோகசவுக்கியமுஞ் செல்வமுங் குறையின்றி யிருக்குமாகில் இடதுபுஜமாயோடில் தாழ்ந்த சவுக்கியமுந் தரித்திர முமாயிருக்குமாம் ஜெலமும் மலமும் முன்பின் அல்லது வொன்றாய்உதித்தால் வியாதியஸ்தராகவே நெடுநாள் துன்பத்துக் கிடமாகவேயிருப்பார்—எ-று. ௩௯

நீங்காத விரலெல்லாம் நெருங்கிப்பாதம்
நீண்டுவெகு அகலமதாய் பெருத்திருந்தால்
தாங்குகின்ற பாதமது செந்தாமரைப்போல்
தளதளப்பாய் மிகசிவந்து தழைத்துநின்றால்
நீங்காத பொருள்படைத்த புருஷனுவான்
நடைக்குறிகி யடிக்குறிகி விரலுங்குன்றி
தேங்கியே விரல்முனைக ளெந்துமட்டுந்
தெரியாமல்மற்றதெல்லாந் திணைபோல்நின்றால்
ஓங்கியே பொருளவற்கு நிற்காதையா
ஒன்றுக்க வொன்றுதுய ருரவாங்காணே.

(இ-ள்) பாதத்தின் விரல்களானது ஒன்றோடொன்று ஒத்துமையாக நெரிங்கியும் புரம் நீட்டமாயும் பாதம் அகண்டும் நீண்டும் உள்ளங் காலானது மிகவுஞ்சிவந்து மெதுவாயிருக்குமாகில் திரண்டசெல்வ முடையவனாயிருப்பான்விரல்கள் குட்டையாயும்

உள்ளங்கால் படியாமலும் அதிகநரம்புகள் மேலிட்டிருந்தாலும் பாதம்நடுவில்விஷம்போல் கருநிரம்ஓடியிருந்தாலும் மிகதரித்திர வா னாயிருப்பான்விரல்மாத்திரம் நீண்டிருந்தால் பிள்ளைகள் உள் ளவனையுஞ் சுகதுக்கஞ் சமமாய் பெற்றவனையு மிருப்பான்-எ-று.

உரவான அங்கத்தின் குறிகளெல்லாம்
ஒருபோதும் பிரியாது நிழல்போற்சேரும்
அரிவான முதியோரே ஆதிகாண்பார்
அல்லாத மூடரெல்லாம் அலைந்தேமாள்வார்
பரமான நான்முகனார் செய்நகூத்து
பாரிடத்தார் சூதென்று பழிக்கவேண்டாம்
திரமான யிக்குறிகள் தெறிந்துசொன்னால்
தெய்வமென் றேயுலகில் தெரிசிப்பாரே.

(இ-ன்) அகத்தினிடமாயுள்ள குறிகளானது தன்னைவிட்டு நீங் காது நிழலைப்போல்சேருமாம்அதாவது (பேரிளமையின்பம் பிணி மூப்புச்சாக்காடு இவையாருங் கருவிலமைப்பு) இதுவுண்மையா கக் கொண்டு இக்காலத்தினது யேற்பாடென்று நூலைப்பழிக்க வேண்டாம் இந்தகுறிகளின் லட்சங்களது ஆந்திரீகம் உறைப்பா ராகில் அவர்களை தெய்வமென்று தெரிப்பார்களாம்—எ-று. சுக

தேங்காய்சகுனம்.

ஏதாகிலும் ஒருகாரியத்திற்குப் போகும்போது விநாயகர் ஆலயத்தில் பரிசுத்தமாய்சென்று தூபதீபங் கொடுத்து தேங்காயுடைத்து நன்மைதீமையறியவும்.

முடிசிறுத்து வட்டமிட்டால் திருவந்தெய்தும்
மூன்றிலொரு பங்குடைந்தால் அச்சம்தோஷம்
நெடியவொரு ஐந்திலொன்று துலையாச்செல்வம்
நீணரம்போ டாருதுண்டு நிதானவாழ்வு
அடியதனல் பொடிசரித்தால் ரத்னம்சேரும்
அடிதுடங்க னிரண்டுசமன் கண்டபூசை
அடியவர்கள் யிடர்றுக்கும் அரனார்மைந்தன்
ஐங்கரனார் மூன்தேங்காய் சகுனம்பாரே.

(இ-ள்) கணபதிக்கு முன்பாகதேங்காயுடைக்கும் போது அடி சிறுத்து வட்டவடிவமாக வுடைந்தால் லட்சுமிகடாக்ஷத்தால் பொன்வந்துசேரும் மூன்றில் ஒருபங்கு வுடைந்தால் நினைத்த காரியத்திற்குஅச்சம் சொல்லும் அதர்வது தோஷமாமென்பது ஐந்தில்ஒருபங்கு வுடைந்தால் துலையாதசெல்வம்பலிக்கும் ஆறு துண்டாயுடையுமாகில் நிதானமானவாழ்வாம் அடிக்கும்போது பல்லுபோல் சிலபொடிகள் தெரித்துவிடுமாகில் நவலோகத்தைச் சேர்ந்த ஆபரணம் சித்திக்கும் நிறைநிருத்ததுபோல் இரண்டு துண்டுஞ் சமமாய் உடையுமாகில் மனத்தில் நினைத்தகாரியம் உடனேகைகூடும் மற்றக்கவலையெல்லாம்நிவர்த்தியாகும் அவ்வி தம்கணேசருக்குமுன்பாக சகுனம்பார்—எ-று. சஉ

ஆணிமுடி தானிரண்டு கூறதானால்
அக்கினியால் பொருளுக்கு சேதமாகும்
பேணியதில் வோடேனை தெரித்துவிழ்ந்தால்
பிணியாலே துன்பமடா பொருளுஞ்சேதம்
நீணியதோர் கண்தெரித்தால் மரணமாகும்
நீளமதாய் பிளந்துவிட்டால் நிலைவிட்டோட்டும்
தாணுவிலே தவறிவிட்டால் குடும்பநாசம்
தந்திமுகன் முன்தேங்காய் சகுனந்தானே.

(இ-ள்) தேங்காயினது குடுமியாகிய முடியானது இரண்டுபங் காய்பிளந்துவிட்டால் அக்கினியால்பொருள்சேதமாகும் வோட் டோடுதெரித்து விழ்ந்தால் வியாதியினால் துன்பப்படுவதன்றி பொருள் நஷ்டமாகும் கண்கள்மாத்திரம் தெரித்து அப்புறம் விழ்ந்துவிடுமாகில் மரணம்வரும் பேர்பாதியாக நிகள்வடிவில் பிளந்து விட்டால் தன்னிருப்பிடம் விட்டு நீக்கிவிடும் அல்லது தேசாந்திரம் போக்கும் அடிபடாமலே தவறியோடிப்போகுமா னால் குடும்பநாசமாம்—எ-று. சங

தேங்காயின் சகுனமிது யிவ்வாராகும்
தேடியிதைச் கண்டதினால் வெளிப்பாடாச்சு
பாங்கான யிச்சகுனந் தெரிந்தபேர்கள்
பாடினவத்த துபகார மென்றேசொல்வார்
போங்காலத் தாலறியும் மூடரப்பா
பொய்யென்றும் புரட்டென்றும் புலம்புவார்கள்
நீங்காம லொருநெறியே பிடித்தபேற்கு
நெஞ்சமே சாட்சியது நிஜமாம்பாரே.

(இ-ள்) இந்தத்தேங்காய்சகுனமானது கணிதசாஸ்திரத்தின் மூலியமாய்த்தேடிக்கிடைத்தமையால் இவ்வளவு சுலபநடையில் வெளியறங்கமாயிற்று அச்சகுனம் தெரிந்துள்ள பெரியோர்களெல்லாம் ஒப்புக்கொள்வாரன்றி தள்ளமாட்டார்களாம் என்போல் அறிவற்ற மூடரெல்லாம் பொய்யென்றும் புரட்டென்றும் கட்டுக்கதையென்றும் தட்டுகெட்டு தலைநாளே சீக்கிரந்தேடுவார்களாம் (எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள்மெய்ப்பொருள்காண்பதறிவு) என்னும்பழமொழியுணர்ந்த பக்குவத்தோரெல்லாம் ஒவ்வொன்றிலும் உண்மையிருக்குமெனவே நிலைப்படுத்துவார்கள்—எ-று. ௪௪

தெரிவதற்கு பொருளொன்றும் மறைப்பில்லாமல்
தீபத்தின்ஒளிபோலே தேசத்தோற்கு
சிறுமணவூர் முனிசாமி செய்தயின்னூல்
சிதம்பரவேள் சுதந்தரமாய் சேகரித்து
அறுமறையின் சிரோன்மணியா மெந்திரத்தில்
ஆதித்தன் போலங்கக் குறிகண்டோர்கள்
திருவருளின் செயல்பெற்று குணமும்பெற்று
தீர்க்காயி சாயென்றும் திகழ்வார்தானே.

(இ-ள்) தீபப்பிரகாசம்போல்வெற்றியநடையாய்சிறுமணவூர் முனிசாமிமுதலியாரால் எழுதப்பட்ட இன்னூலை சகலசுதந்தரத்துடன் பி-நா-சிதம்பரமுதலியார் யென்பவர்பெற்றுக்கொண்டு தமதுசிரோமன்மணிவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பத்து சூரியனைப்போல் சகலவுலகமும் அரியும்படியாய்வெளியிட்டார் இன்னூலின் கருத்துணர்பவர்களும் அப்படியே சந்திரசூரியர்போல் தீர்க்காயுசாய் வாழ்ந்திருப்பார்—எ-று.

அங்கக்குறி சாத்திரம்.

முற்றிற்று
